## இந்திய உயர் ஸ்தானிகராலயம்
## கொழும்பு

***************

## ஊடக அறிக்கை

**ITEC திட்டத்தின் கீழ் இலங்கை பொலிஸ் அதிகாரிகளுக்கு இணையம் மூலமான பயிற்சி நெறிகள்**

இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ் (e-ITEC) இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பல்வேறு பயிற்சி நெறிகள் 2021 ஜனவரி 27ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளது. தற்போது காணப்படும் கொவிட்19 பயணத் தடைகள் காரணமாக மெய்நிகர் மார்க்கங்கள் ஊடாக 10 பயிற்சி நெறிகள் அடுத்த ஒரு மாத காலப்பகுதிக்குள் நடத்தப்படவுள்ளன. இதன் ஆரம்ப நிகழ்வில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு பிரியந்த வீரசூரிய மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சின் பொலிஸ் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்கள (BPR&D) அதிகாரிகள் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

2. பொலிஸ் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திணைக்களமானது இவ்வாறான பயிற்சித் திட்டங்களை பல்வேறு பயிற்சி நிலையங்கள் ஊடாக முன்னெடுத்து வரும் அமைப்பாகும். குறிப்பாக இந்த பயிற்சி நெறிகள் இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் இந்திய மற்றும் இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது அனுபவங்களை எவ்வாறு சரியான முறையில் பகிர்ந்து கொள்ள முடியும் என்பதற்கும் வழிகாட்டும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. நவீன காலத்தில் சவால்களை எதிர் கொள்வதற்கு தேவையான வினைத்திறன் மிக்க ஆளுமையினை இலங்கை பொலிஸார் பெற்றுக்கொள்வதற்கு இதன்மூலம் வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. முக்கியமாக ஆட்கடத்தல்கள், நிதி மோசடி தொடர்பான விசாரணைகள், போதைப்பொருட்கள் மற்றும் ஏனைய போதைவஸ்துக்கள், புலனாய்வு மற்றும் தேசிய பாதுகாப்பு குறித்த பயிற்சிகள், இணைய குற்றங்கள், அடிப்படைவாதம் ஒழிப்பு மற்றும் பயங்கரவாத ஒழிப்பு, விசாரணை தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கியதாக இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் அமைந்துள்ளன. பொலிஸ் அத்தியட்சகர், பிரதம பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் பரிசோதகர்

மற்றும் பொலிஸ் உதவி பரிசோதகர் உள்ளிட்ட தரங்களைசேர்ந்த அதிகாரிகள் முதல் இலங்கை பொலிசினால் பரிந்துரைக்கப்பட்ட இருபத்தைந்து உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு பயிற்சியிலும் உள் வாங்கப்படுகின்றனர்.

3. இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தேவையான பயிற்சிகளின் அடிப்படையில் இந்தியா முழுவதும் உள்ள முன்னணி பயிற்சி நிலையங்களில் நடைபெறும் பயிற்சிகளில் கலந்து கொள்வதற்காக கடந்த காலங்களில் இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். 2018 முதல் 2019 வரையான காலப்பகுதிகளில் இருநூறுக்கும் அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்களும் சட்டத்துறை சார் அதிகாரிகளும் பல்வேறு பயிற்சி நிறுவனங்களில் பரந்தளவிலான விடயங்களில் இந்தியாவில் பயிற்சி பெற்றுள்ளனர். இந்த பயிற்சி நெறிகள் முற்று முழுதாக இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதியுதவியின் கீழ் முன்னெடுக்கப்படுவது டன் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் ஆளுமை விருத்திக்கு துணையாக அமைகின்றன. அதேநேரம் இலங்கை பொலிஸ் அதிகாரிகளுடனான உரையாடல்கள் மற்றும் அனுபவப்பகிர்வு ஆகியவை மூலமாக இந்தியாவும் பயனடைகின்றது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

*************

கொழும்பு
29 ஜனவரி 2021